**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 91/2023**

**Deposition of Witness :PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகவள்ளி | Taluk | |
| Husband Name | சேகர் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 09.03.2026.** | | | |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் பழமாபுரம் ஆகும். என் கணவர் ஊரில் இருந்து பக்கம் என்றால் சரிதான். 2 கி.மீ இருக்கும். எனது அம்மாவின் அம்மா ஊர் பஞ்சமாதேவி ஆகும். நான் தற்போது அங்கு தான் குடியிருந்து வருகிறேன். திருமணத்தின்போது எங்கு குடியிருந்தேன் என்றால் பழமாபுரத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தேன். திருமணத்திற்கு முன்பு என் அப்பா, அம்மாவின் உறவுமுறை சரியாக இருந்ததா என்றால் சரியாகத்தான் இருந்தது. ஏன் வாடகை வீட்டில் குடியிருந்தீர்கள் என்றால் சொந்த வீடு இல்லை, அதனால் வாடகை வீட்டில் குடியிருந்தோம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.இ படித்துளளேன். நான் எங்கு பணிபுரிந்து வருகிறேன் என்றால் நான் தற்போது வேலைக்கு செல்லவில்லை. இதற்கு முன்பு குமாரசாமி இன்ஜினியரிங் கல்லூரியில் பணிபுரிந்து வந்தேன். எவ்வளவு காலம் அங்கு வேலை பார்த்து வந்தேன் என்றால் 7 வருடங்களாக வேலை பார்த்தேன். குழந்தையை பார்த்து கொள்வதற்காக கடந்த டிசம்பர் 2025 மாதம் Relieve செய்தார்கள்.

2) நான் அங்கு என்னவாக வேலை பார்த்தேன் என்றால் Teaching Assistant ஆக வேலைபார்த்தேன். மாத சம்பளம் எவ்வளவு என்றால் மொத்தமாக ரூ. 17 ஆயிரம் வாங்கினேன். மனுவில் நான் வேலை பார்த்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அப்படி சொல்லவில்லை என்றும், எதிர்மனுதாரர்தான் எதிருரையில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். மனுதாக்கல் செய்த காலத்தில் நான் என்னை பராமரிக்கற அளவுக்கு இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப நல நீதிமன்றத்தில் எனக்கும், என் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு MC NO.42/2018 மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி மனுவில் என்ன தீர்ப்பானது என்றால் எனக்கும், என் குழந்தைக்கும் தலா ரூ.

Sd/−T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

10 ஆயிரம் வழங்கவேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் படி 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வந்தார் என்று சொன்னால் செலுத்தவில்லை. மேல் முறையீட்டில் மேற்படி தொகையை எனக்கு ரூ. 5 ஆயிரமும், என் குழந்தைக்கு 10 ஆயிரம் வழங்க வேண்டுமென்று தீர்ப்பானது. மேற்படி உத்தரவு எந்த வருடம் பிறப்பிக்கப்பட்டது என்றால் 2022ம் ஆண்டு. அதன்படி எதிர்மனுதாரர் செலுத்தவில்லை. அதனால் சம்பள பற்றுகைக்காக மனு செய்தபோதுதான் அவர் பணத்தை செலுத்தினார். கடைசி 2 மாதம் எனக்கு வரவில்லை.

3) 2018ம் ஆண்டில் இருந்து தற்போது வரை 1ம் எதிர்மனுதாரர் எல்லா தொகையும் செலுத்தி விட்டார் என்றும், எந்த தொகையும் நிலுவையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2025ம் ஆண்டு இரண்டு மாதங்கள் எனக்கு தொகை கொடுக்கவில்லை . மனுதாக்கல் செய்த காலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் தொகை செலுத்தி வந்தார் என்றும், என்னை பராமரிக்ககூடிய அளவுக்கு இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின்போது 17 பவுன் நகை போட்டதாக சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரொக்க பணம் ரூ. 5 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் ரூ. 5 லட்சம் கேட்டார்கள், 1 லட்சம் கொடுத்தோம். திருமண செலவிற்காக எங்கள் வீட்டில் இருந்து 2 லட்சம் கொடுத்தோம்.

4) பணம் ரூ. 1 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த பேக்கில் joint அக்கவுண்ட் உள்ளதா என்றால் UCO வங்கி, கரூர் கிளையில் உள்ளது. மேற்படி வங்கி கணக்கிற்கு Locker facility இருக்கிறது என்று சொன்னால் சரிதான். Locker ல் என்னுடைய நகை, பொருட்கள் எல்லாம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்குதான் தெரியும். 1ம் எதிர்மனுதாரரிடம் சாவி இல்லை என்றும், என்னிடம் தான் சாவி உள்ளது என்றும், லாக்கரில் உள்ள நகை மற்றும் பொருட்களை நான் பெற்று கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தனிக்குடித்தனம் போகுவதற்காக ரூ.1,55,000/- 1ம் எதிர்மனுதாரரிடம் எனது பெற்றோர் கொடுத்ததாக கூறியுள்ளதும், ரூ.1,25,000த்தை வங்கியில் Joint Deposit செய்தும், ரூ. 30 ஆயிரத்துக்கு பொருட்கள் வாங்கிகொடுத்ததாகவும் சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.

5) என் கணவர்தான், என்மேல் உள்ள பிரியத்தின் காரணமாக ரூ.1,25,000/- த்தை

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

டெபாசிட் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பழமாபுரத்தில் எனக்கு பூர்வீக சொத்து உள்ளதா என்றால் இல்லை. எனது அம்மா பெயரில் எதுவும் சொத்து உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என் பெயரில் இல்லை. என் தாத்தாவின் பெயர் விருப்பண்ண கவுண்டர், எனது தந்தையின் பெயர் பழனிச்சாமி, என் அம்மாவின் பெயர் ராஜேஸ்வரி ஆகும். என் அப்பா பூர்வீக சொத்தில் பங்கு கேட்டு கரூர் சார்பு நீதிமன்றத்தில் OS NO. 469/1993 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் அவரின் பாகத்திற்கு பிரிந்த சொத்தை எனது அம்மாவிற்கு 07.05.1995 ம்தேதி கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை 06.01.2009 ம்தேதியன்று என் அம்மா, புன்னம் சத்திரம் கூட்டுறவு விவசாய சங்கத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றாரா என்றால் எனக்கு தெரியாது.

6) மேற்படி கிரைய பத்திரத்தினை எனது தகப்பனார், எனது அம்மாவுடன் சேர்ந்து வாழ்வதற்காக நிபந்தனையின் பேரில் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் எனக்கும், அதற்கும் சம்பந்தமில்லை, அதனால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2 எதிர்மனுதாரர்கள் ரூ. 10 லட்ச பணமும், 50 பவுன் நகையும் கேட்டு கொடுமை செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. 17.02.2010 ம்தேதியன்று வளைகாப்பு நடந்ததாக சொல்வதும், அதற்கு என் பெற்றோர்கள்தான் செலவு செய்தார்கள் என்று சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. 17.02.2016 ம் தேதி வளைகாப்பு நடந்தது. என்பெற்றோர்கள் தான் செலவு செய்தார்கள். எனக்கு எப்போது பெண் குழந்தை பிறந்தது என்றால் 02.04.2016 ம்தேதி பிறந்தது. மனுவில் 02.04.2018 ம்தேதி என்று சொல்லியுள்ளது தவறு என்றால் எழுத்துபிழையாக இருக்கும். குழந்தை எந்த மருத்துவமனையில் பிறந்தது என்றால் கரூர் GV மருத்துவமனையில் பிறந்தது.

7) குழந்தை பிறந்ததற்குண்டான செலவுகளை யார் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மாதான் கொடுத்தார். மேற்படி செலவுகளை 1ம் எதிர்மனுதாரர்தான் கொடுத்தார் என்றும், அதற்குண்டான ஆவணங்களை வைத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாதான் கொடுத்தார். அந்த பில்களை வைத்து அவர் claim செய்து கொண்டார். ஒருத்தர் செலுத்திய பில்லுக்கு மற்றொருவர் claim செய்யமுடியாது என்று சொன்னால் என் அம்மாவிடம் பணம் பெற்று கொண்டு ,செலுத்தி விட்டு அவர் claim செய்து கொண்டார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் குழந்தைக்கு எப்போது பெயர் வைத்தோம் என்றால் ஜுன் 2016 மாதம் பெயர் வைத்தோம். எங்கு பெயர் சூட்டு விழா நடந்தது என்றால் மோகனுார் நவலடியான் கோவிலில் நடந்தது. என்ன பெயர் வைத்தோம்

Sd/−T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

என்றால் சாதிகாஸ்ரீ என்று பெயர் வைத்தோம். பின்னிட்டு S.S.சன்ரியா என்று பெயர் மாற்றம் செய்தோம். எப்போது பெயர் மாற்றம் செய்தோம் என்றால் குழந்தை பிறந்து 2 ஆண்டுகளுக்குள் மாற்றம் செய்தோம்.

8) பெயர் வைத்ததற்கும், பெயர் மாற்றம் செய்ததற்கும் என் கணவரிடம் ஆலோசித்தேனா என்றால் போன் மூலம் ஆலோசித்தேன். நான் எந்த ஆலோசனையும் பெறவில்லை என்றும், தன்னிச்சையாக பெயர் மாற்றம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. பெயர் மாற்றத்திற்கு என்ன காரணம் என்றால் பிறப்பு சான்றிதழுக்கு நான் விண்ணப்பிக்க சென்றபோது 6, 7 மாதத்திற்கு முன்பே 1ம் எதிர்மனுதாரர் பெற்று சென்றுவிட்டார் என்று அலுவலகத்தில் கூறினார்கள். பின்னிட்டு அதன் நகலை பெற்று அதை வைத்து Gazette ல் பெயர் மாற்றம் செய்தேன். மோகனூர் கோயிலில் என்ன பெயர் வைத்தோம் என்றால் சாதிகாஸ்ரீ என்றுதான் பெயர் வைத்தோம். சன்ரியா என்று பெயர் மாற்றம் செய்ததற்கான காரணம் என்ன என்றால் 1ம் எதிர்மனுதாரர் முன்னதாகவே பிறப்பு சான்றிதழை வாங்கி சென்றுவிட்டார். நேரம் சரியில்லாததால் , ஜாதகம் பார்த்து பெயர் மாற்றம் செய்தோம். மோகனூர் கோவிலில் குழந்தைக்கு பெயர் சூட்டும்போது 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் கலந்து கொண்டார்களா என்றால் 1ம் எதிர்மனுதாரர் மட்டும் கலந்து கொண்டார்.

9) நான், என் கணவர் மேல் இருக்கிற வெறுப்பின் காரணமாகத்தான் என் மகளுக்கு பெயர் மாற்றம் செய்தேன் என்றும், அவரிடம் ஆலோசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் Logitrats Technolo Nit Ltd-I Senior Programmar ஆக வேலைபார்த்து மாதம் ரூ. 1லட்சம் சம்பாதிப்பதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என் கணவருக்கு பூர்வீக சொத்து உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றும், அது என்கணவரின் அப்பா வகையில் வழிவழியாக வந்த சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்து எனது மாமனார் கந்தசாமிக்கும், அவரது சகோதரர் பழனிசாமிக்கும் கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது மாமனார் கந்தசாமியும், அவருடைய சகோதரர் பழனிசாமியும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

10) எனது கணவருடன் உடன்பிறந்த சகோதரர் முத்து குமார் என்றால் சரிதான். பழனிசாமிக்கு தெய்வானை என்கிற மனைவியும், பத்மாவதி, சரிதா என்ற இரண்டு மகள்களும், கதிர்வேல் என்ற மகனும் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து மானாவாரி நிலம் என்றால் கிணறு உள்ளது. நீர்பாசனம் எதுவும இல்லை என்றும், அதிலிருந்து ஆண்டுக்கு ரூ.3

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

லட்சம் வருமானம் ஈட்டி வருவதாகவும் சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. சொத்து எதுவும் பாகம் பிரிக்காமல் வெறும் நிலமாக சாகுபடி செய்யாமல் உள்ளது என்று சொன்னால் பாகம்பிரிக்காமல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. என் கணவர் பைனான்சில் 15 லட்சம் முதலீடு செய்து அதிலிருந்த மாதத்திற்கு ரூ. 50 ஆயிரம் வட்டியாக பெற்று வருகிறார் என்று சொல்வதற்கு அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் என்னிடத்தில் சொன்னதை வைத்து சொல்கிறேன்.

11) 1ம் எதிர்மனுதாரருக்கு புன்னம் கிராமத்தில் 2 லட்சம் மதிப்புள்ள வீடு உள்ளது என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முத்து நகரில் வீட்டு மனை உள்ளது என்றும், மேற்படி மனை எனது மாமனார் கந்தசாமி பெயரில் கிரையம் ஏற்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது மாமனார் வாங்கிய கடனை திரும்ப கொடுக்கும் பொருட்டு, விற்று கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மீதமுள்ள ஒரு மனை 2ம் எதிர்மனுதாரர் அவருடைய சுயசம்பாத்தியத்தில், அவரின் பெயருக்கு கிரையம் ஏற்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. Uco வங்கியில் இருக்கும் டெபாசிட் அப்படியேதான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் சென்னையில் பணிபுரிந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

12) குமாரசாமி இன்ஜினியரிங் கல்லூரி துணை நிறுவனம்தான் பரணிபார்க் பள்ளி என்று சொன்னால் சரியல்ல. இரண்டு நிறுவனத்தின் உரிமையாளர்களும் cousins . பொதுவாக குமாரசாமி இன்ஜினியரிங் கல்லூரியில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு, பரணிபார்க் பள்ளியில் இலவசமாக கல்வி கட்டணம் இல்லாமல் பயிற்றுவிக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் மகளுக்கு கல்வி கட்டணம் செலுத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர், என்னுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தார் என்றும், நான்தான் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் பலமுறை சேர்ந்து வாழ முயற்சி செய்தேன், அவர்தான் விவகாரத்து கோரி மனு தாக்கல் செய்தார்.

13) 1ம் எதிர்மனுதாரரின் சொத்தில் இருந்து எனக்கு 3 ஏக்கரும், என் குழந்தைக்கு 2 ஏக்கரும் எழுதி கொடுத்தும், ரூ.10 லட்சம் பணமும் கொடுத்தால்தான் சேர்ந்து வாழ்வேன் என்று என்னிடம் சமாதானம் பேச வந்த 1ம் எதிர்மனுதாரரிடம் நான் தகராறு செய்து அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சொத்தும், பணமும் கொடுக்கவில்லை என்றால் கொலை செய்துவிடுவேன் என்று SMS , E-mail மூலம் மிரட்டினேன் என்று சொன்னால்

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

சரியல்ல. எனக்கும், என் கணவருக்கும் குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP NO 621/2024 வழக்கில் விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்தில் பாகம்கேட்டு பாகப்பிரிவினை வழக்கு OS NO.402/2020 என்ற வழக்கை கரூர் சார்பு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என்னை பராமரிக்கிற அளவுக்கு வசதி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தினார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் போன் மூலமாக அவரை கொடுமைபடுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

14) நான், புன்னம் நடுப்பாளையம், 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் எந்த காலத்திலும் வசிக்க வில்லை என்றும், அதனால் அங்கு வசிப்பிட கட்டளை கோர எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அங்கு 1 வருடகாலம் நானும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம். திருமணம் முடிந்து நான் சென்னைக்கு 1ம் எதிர்மனுதாரர் வேலை நிமித்தமாக சென்றுவிட்டதால் அவருடன் அங்கு வசித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அங்கு 5 மாதம்தான் வசித்துவிட்டு, புன்னம் நடுப்பாளைத்திற்கு வந்துவிட்டோம். நான் சென்னையில் இருந்து வந்தபிறகு புன்னம் நடுப்பாளையத்தில் வசிக்கவில்லை, எனது தாயாரின் அம்மா வீட்டில் வசித்து வந்தேன் என்ற சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொன்ன அனைத்து சங்கதிகளும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்